வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 4154 /ஆ4 /2022, நாள் : 17.11.2022

பொருள்: வேலூர் மாவட்டம் – குழ்ந்தைகள் தினவிழா முன்னிட்டு வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் 6–ஆம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 19.11.2022 அன்று ஓவியப்போட்டி நடைபெறுதல் – சார்பாக.

பார்வை: வேலூர், அரசு பெருங்காட்சியகம் காப்பாட்சியரின் செய்திக் குறிப்பு கடிதம் நாள். 17.11.2022.

#######

பார்வையில் காணும் செய்திக் குறிப்பு கடிதத்தின்படி, குழந்தைகள் தினமான நவம்பர் 14–ஐ முன்னிட்டு, வேலூர் அரசு அருங்காட்சியகம் சார்பில் 6–ஆம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக எதிர்வரும் 19.11.2022 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.30 மணி வரை ஓவியப்போட்டி வேலூர் கோட்டையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில், நடத்தப்பட உள்ளது. ஓவியப்போட்டியின் தலைப்பு **<u>வேலூர் மாவட்ட நினைவுச் சின்னங்கள் (Monuments in Vellore District)</u>**

பள்ளி மாணவர்களின், கலைத்திறனை ஊக்கப்படுத்தும் வகையில் இந்த ஓவியப்போட்டியானது 6–ஆம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட உள்ளது. எனவே, ஓவியத்தில் ஆர்வமுள்ள தங்கள் பள்ளியில் 6–ஆம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் கலந்துகொள்ளும் பொருட்டு, கலந்துகொள்ளும் மாணவர்களின் பெயர்பட்டியலுடன் ஒரு பொறுப்பான ஆசிரியரை நியமித்து, உடனடியாக 18,011,2022–க்குள் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. பெயரை பதிவு செய்த மாணவர்கள் மட்டுமே ஓவியப்போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். பள்ளி ஒன்றுக்கு 3 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் ஓவியப்போட்டிக்கான ஓவிய தாள் மட்டுமே அருங்காட்சியகத்தில் வழங்கப்படும் ஏனைய பொருட்களை மாணவர்களே கொண்டு வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒ/ப முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்–9.

பெறுநர்
அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.
நகல்– மாவட்டக் கல்வி அலுவலர்,(இடைநிலைக்கல்வி)வேலூர்,

//ப.த.//